
அன்பளிப்பு:
க. வைத்தீசுவரக்குருக்கள்

உ

காரைநகரில்

# சைவசமய வளர்ச்சி



ஆசிரியர்:

க. வைத்திசுவரக்குருக்கள்

பாரை. செ. சுந்தரம்பிள்ளை

உ

காரைநகரில்

# சைவசமய வளர்ச்சி

ஆசிரியர்:

க. வைத்தீசுவரக்குருக்கள்

வெளியீடு:

தமிழ் வளர்ச்சிக் கழகம், காரைநகர்.

1982

# பதிப்புரை

அகில உலக இந்து மகாநாடு கொழும்பில் நடைபெற்ற போது, நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையத்தினர் சிறப்பு மலரொன்று வெளியிட்டிருந்ததை யாவரும் அறிவர். அம் மலரிலுள்ள, 'காரைநகரில் சமய வளர்ச்சி' என்னுங் கட்டுரையைப் படித்த அன்பர்கள் பலர், அதனைச் சிறிது விரிவாக எழுதுவித்து ஒரு நூலாக வெளியிட்டால், அந்நூல் காரைநகர் மக்களுக்கு மட்டுமன்றி ஏனையோருக்கும் பயன்படும் என்று எமக்குத் தெரிவித்து, அப்பணியை எம்மையே செய்யும்படி வேண்டுகோளும் விடுத்தனர். அவர்களின் வேண்டுகோளுக்கு மதிப்பளிக்கும் வகையிலும், பெரியோரின் உண்மைத் தொண்டுகளுக்கு உயர்வளிக்கும் வகையிலும் இந்நூலை வெளியிடுகின்றோம்.

தமது உடல் நலத்தையும் பொருட்படுத்தாது இந்நூலை எழுதியுதவிய சிவத்திரு க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்களுக்கும், அணிந்துரை வழங்கிச் சிறப்பித்த, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. ந. சபாரத்தினம் B. A. அவர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இந்நூலைச் சிறப்புற அச்சிட்டுதவிய காரைநகர் பாலா அச்சகத்தினருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

காரைநகர்,
25 - 12 - 82.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்னுள் அதிபர்
திரு. ந. சபாரத்தினம் B. A. அவர்கள்
வழங்கிய

# அணிந்துரை

கல்வி, பொருள், நல்ல குணம் முதலான எல்லாமே செல்வம் எனப்படும். ஆனல், செல்வத்துட் செல்வமாக மிளிர்வது பணிவாகும்.

காரைநகர் மக்கள் மேலே கூறப்பட்ட முதன் மூன்று செல்வங்களைப் பெற்றிருந்தும் எவ்வித செருக்குமின்றிப் பணிவுடன் வாழும் பண்புடையவர்கள் என்பது வெளியூர் மக்களின் கணிப்பு. இது சிந்தனைக்குரியது.

'காரைநகரில் சைவசமய வளர்ச்சி' என்னும் இச்சிறு நூலைப் படிப்பவர்களுக்கு இவ்வூர் மக்கள், பணிவுடன் வாழும் இரகசியம் ஓரளவிற்குப் புலப்படும்.

இந்நூலில், இவ்வூர் மக்களின் ஒழுக்க வாழ்வு, தெய்வ பக்தியில் அமைந்திருப்பதனையும், காலத்துக்குக் காலம் இங்கே தோன்றிய பற்றற்ற அடியார்களின் போதனையாலும் சாதனையாலும் அது எந்நாளும் நிலைபெற்று நிற்பதனையும் ஆசிரியர் சிவத்திரு க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்கள் வரலாற்றுரீதியில் விளக்குகிறுர். இதுவே இந்நூலின் தனிச் சிறப்பாகும்.

இப்பழம் பெரும் தீவிற் குடியேறிய மக்கள் யார்? அவர் கள் எங்கிருந்து வந்தனர்? எப்போது வந்தனர்? பண்டைக் கால மன்னர் ஆட்சியிலும் பின்வந்த ஆட்சியிலும் அவர்கள் இயற்றிய சாதனைகள் என்ன? அவை தொடர்பாக இன்றைய காலமாற்றத்தில் மக்களின் சமய வாழ்வு எவ்வாறு பேணப் படுகிறது? என்பன போன்ற வினுக்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதே இந்நூல். தோற்றம் சிறிது; பணிபெரிது.

இவ்வூர் மக்களின் சமய வளர்ச்சி, ஈழத்துச்சிதம்பரம் என்று சொல்லப்படும் காரைநகர்ச் சிவன்கோயிலை மைய மாகக் கொண்டிருப்பது நூலில் தெளிவுறுத்தப்படுகிறது.

இக்கோயிலின் தனிப் பெருமையைச் சொல்லும் ஈழத்துச் சிதம்பர புராணத்திலுள்ள, "அப்பெரியாரின் நினைவென்கோ அவருள்ளச் சிலையென்கோ" என்ற பாட்டிற் குறிப்பிடப் படும் பெரியார், சிவமுருகர் என்று சொல்லப்படும் அம்பல விமுருகர் ஆவர். எங்கள் மூதாதையர் தமது பேச்சில் சிவன் கோயிலை, 'அம்பலவிமுருகர் வைத்தகல்' என்பர்.

காரைநகரில் சைவம் வளர்ந்த கதை, பெரும்பாலும் இக்கல் சொல்லும் கதையென்றால் அது தவறாகாது .எனவே, சிவமுருகர் ஒரு வரலாற்று நாயகர் ஆவர். இத்தகைய மாட்சிமை மிக்க சிவமுருகர் அவதரிக்க, அக்கால மக்களின் சமய உணர்வு ஆதாரமாயிருக்க வேண்டுமென்று கொள்வர் வரலாற்று நிபுணர்கள். ஆகவே, சைவமும் தமிழும் செழிப்புற்று வளரும் காரைமாநகரின் புராதன வரலாறு இன்னும் விரிவாக ஆராயப்பட வேண்டிய அவசியத்தை இந்நூல் விளக்குகின்றது.

நூல் ஆராய்ச்சி, அறிஞர்களுடன் உரையாடல், கருத்து முரண்பாடுகளைச் சமன்செய்தல் போன்ற திறமைகள் இவ்வித நூல் எழுதுபவர்களுக்கு இன்றியமையாதவை. நூலாசிரியரின் சாமர்த்தியம் இந்த வகையில் அவரது முயற்சிக்கு வெற்றியளித்திருக்கிறது. இது பாராட்டுக்குரியது.

இவ்வரலாற்று நூல், மேலும் விரிவான ஆராய்ச்சி நூல்களுக்கு வழிகோலுவதுடன் எங்கள் இளஞ்சந்ததியினருக்கு ஊக்கமும் உறுதியும் அளிக்குமென்பதில் ஐயமில்லை.

*110, அம்பலவாணர் வீதி,* — ந. சபாரத்தினம்.
*யாழ்ப்பாணம், 25 - 12 - 1982.*

உ

# காரைநகரில் சைவசமய வளர்ச்சி

## குமரிகண்டத்தின் ஒரு பகுதி:

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இந்துமாக் கடலின் பெரும் பகுதி நிலப்பரப்பாயிருந்ததென்பர். பழந்தமிழ் நூல்கள் அதனைக் குமரிகண்டம் எனக் குறிப்பிட்டன. கடல் கோள்களாலும், இயற்கை நிகழ்ச்சிகளாலும் குமரிமலை உட்பட, குமரிகண்டத்தின் பெரும் பகுதி ஆழ்ந்து போயிற்று. இந்தியாவும் இலங்கையும் மற்றுந் தீவுகள் சிலவும் அழியாது எஞ்சி நின்றன. குமரிகண்டம் அழிந்தமையை,

[1]"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள"

[2]"மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வெளவலின்"

என்னும் பழையநூற் பகுதிகளால் அறியலாம். மேலும், 'ஸ்கொற் எலியெற்' (Scott Elliot) என்னும் மேலை நாட்டறிஞர் எழுதியுள்ள மறைந்த 'குமரிகண்டம்' (Lost Lemuria) என்னும் நூலும் இவ்வுண்மையைப் புலப்படுத்தும். காரைதீவு, அழியாது எஞ்சிநின்ற குமரிகண்டத்தின் ஒருபகுதியாகும். இதனை, ஈழத்துச் சிதம்பர புராணம்,

[3]"கூறுவர லாறுடையார் குமரி கண்டச்
சிதைவென்பர் கோலத் தீவை"

என்று குறிப்படும். [4] குமரிமலையே மகேந்திரமலையெனவும் வழங்கப்பட்டு வந்ததென்பது பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளை எம். ஏ., எம். எல். அவர்களின் கருத்தாகும்.

## பெயர்க் காரணம்:

தமிழ்ச் சான்றோர், காரைச்செடி மிக்கிருந்தமையின் காரைதீவு என்னும் பெயர் உண்டாயிற்றென்பர். அன்றியும்,

---

1. சிலப்பதிகாரம், காதை 11 . 19 – 20
2. கலித்தொகை– 104
3. காரைவளச் சருக்கம் – 2
4. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினர்க்கினியர் உரை. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகவெளியீடு 1923. பக்கம்: 5

1அறிஞர்கள் சிலர் அம்பலாங்கொடை, இரத்தினபுரி முதலிய இடங்களில் வாழும் சிங்கள வைத்தியர்களிடமுள்ள மிகப் பழைமை வாய்ந்த ஏடுகளில் காரைதீவு பற்றிய குறிப்புகள் இருப்பதாகவும், அக்குறிப்புகள், காரைச்செடிகள் மிக்கிருந்தமையின் காரைதீவு என்ற பெயர் உண்டாயிற்று என்று தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார்கள்.

**மக்களின் தாயகம்:**

மிகப் பழைய காலம் முதல் இப்பகுதியில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இதனை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினர் 1980 ஆம் ஆண்டில், களபூமி என்னும் இடத்தில் அகழ்வாராய்ச்சி மேற்கொண்டு, நிலத்திற்கு அடியிலிருந்து எடுத்த எலும்புக்கூடுகளும் பிறபொருள்களும் உறுதிப் படுத்துகின்றன. இங்கிருந்து யாழ்நகரின் பல பகுதிகளுக்குச் சென்று மக்கள் குடியேறியும் உள்ளனர்.

**காரைநகர் என்ற பெயரின் உதயம்:**

இப்பழம் பெருந்தீவு, யாழ்நகரிலிருந்து வடமேற்குத் திசையில் 20 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. இது யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் 1869 ஆம் ஆண்டு, அப்போது அரசாங்க அதிபராயிருந்த துவைனந்துரையால் வீதி மூலம் இணைக்கப்பட்டது. அதுமுதல் கற்றோரும் மற்றோரும் காரைநகர் என்று வழங்கத் தலைப்பட்டனர்.

1887ஆம் ஆண்டு 2தக்ஷிணகைலாச புராணத்தைப் பதிப்பித்த சிவசிதம்பரஐயர், அதன் தலைப்புத் தாளில், காரைநகர் என்று குறிப்பிட்டிருப்பதும், 1897ஆம் ஆண்டு, கார்த்திகேயப்புலவர், தாம் யாத்த 3திண்ணபுரத் திரிபந்தாதிக் காப்புச் செய்யுளில், ''திருவேலை யட்டவன் காரை

---

1 அ. காரைநகர், திரு. வீ. வன்னியசிங்கம் B. A.
ஆ. தென்கோவை, பண்டிதர் ச. கந்தையபிள்ளை (வித்தகம் கந்தையா)
இ. வட்டுக்கோட்டையூர், மக்கள் கவிமணி மு. இராமலிங்கம்

2. ஆசிரியர்: யாழ்ப்பாணத்து நல்லூர் மஹாவித்துவான் சிங்கைச் செகராசசேகரன். செய்யுள்கள் 932.

3. ஈழத்துச் சிதம்பரத்துச் சுந்தரேஸ்வரர்மீது பாடப்பட்டது.

நகருறுந் திண்ணபுரம்'' என்று குறிப்பிட்டிருப்பதும் நோக்கற்பாலன. அன்றியும் புத்தளம், மட்டக்களப்பு என்னும் பிற பகுதிகளிலும் காரைதீவுகள் அமைந்துளவாதலின் தபாற்சேவை தொடர்பாகத் தொல்லைகள் தோன்றின. அவற்றை நீக்கும் பொருட்டு அரசினரும் யாழ்ப்பாணக் காரைதீவை 12 - 9 - 1923 தொடக்கம் காரைநகர் என்றே மாற்றி அமைத்துக் கொண்டனர்.

## குறிச்சிப் பெயர்கள் கூறும் கதை:

காரைமாநகரிலே தங்கோடை, பலிகாடு, களபூமி, வலந்தலை முதலிய குறிச்சிகள் உண்டு. அவையெல்லாம் பழம் பெரும் கதைகள் பலவற்றைத் தம்முட் பொதிந்து வைத்துள்ளன என்பர் காலங்கண்ட முதியோர். அவர்கள் தங்கோடை, களபூமி, வலந்தலை என்னும் குறிச்சிப் பெயர்களின் அடிப்படையில், ஒரு காலத்தில் வேற்றுநாட்டிலிருந்து ஈழமண்டலத்தை நோக்கிக் கடல் வழியாக வந்த பெரும் படையொன்று காரைநகரை அடைந்ததென்றும், அப்படை பாடியமைத்துத் தங்கிய இடமே தங்கோடை என்றும், போர் நிகழ்வுற்ற இடமே களபூமி என்றும், வெற்றிவிழா எடுத்த இடமே வலந்தலை என்றுங் கூறுவர். அன்றியும் அவர்கள், தமது கூற்றுக்கு ஆதாரமாக வரலாற்று அறிஞர் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, தாம் எழுதிய 1யாழ்ப்பாணச் சரித்திரத்தில், பாண்டி மண்டலத்தாருக்கும் ஈழமண்டலத்தாருக்கும் போர் நடைபெற்ற காலங்களில் போர்க்களமாயிருந்த இடம் களபூமி என்று கூறியிருப்பதையும் ஒன்றுகக் காட்டுவர்.

## ஞானியரைக் கவர்ந்த நன்னகர்:

ஞானபூமியாகிய பாரத நாட்டின்கண் வாழ்ந்த பெரியோர் பலரைத் தன்பால் ஈர்த்த சால்பு மிக்கது காரையம்பதி. துருவாசர் என்னும் பெருமுனிவர், பாரதநாட்டிலிருந்தும் இங்குப் போந்து ஈழத்துச் சிதம்பரத்திற்கு அண்மையில் பர்ணசாலை அமைத்துத் தவம் புரிந்து வீடு பெற்றனர். அன்றியும், தினகரன் என்னும் பேரறிஞர், பல்லாயிரம்

---

1. பக்கம்: 4

ஆண்டுகளுக்கு முன்னே ஈழத்துச் சிதம்பரத்தைச் சேர்ந்த திண்ணபுரத்தே வந்திருந்து சைவத்தையும் தமிழையும் வளர்த்து வந்தார். அவர் இருந்த இடம் 'தினகரன்பிட்டி' என்று இப்போது வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், [1]'அகத்தியர் வரலாறு' என்னும் நூலில், ஆர்யாவர்த்தத்தில் கன்னேஜ் நாட்டிற் பிறந்தவரும், வட மொழி தென்மொழிகளில் வல்லுநருமாகிய அகத்தியர் என்பவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காரைதீவுக்கு வந்து தனியாக ஓர் ஆச்சிரமம் அமைத்துத் தவம் புரிந்தார் என்றும் கூறப்பட்டுள்ளது.

## பழம் பிறப்புணர்த்திய பண்பின் மூதூர்:

பேராசிரியர் மு. இராகவையங்கார் அவர்கள், மணி மேகலா தெய்வத்தால் அழைத்துவரப்பட்ட மணிமேகலை யார் வந்து சேர்ந்த மணிபல்லவம் காரைதீவேயென்றும், இதற்கும் காவிரிப்பூம்பட்டினத்துக்கும் தொடர்பு இருந்த தென்றும் தமது [2]'ஆராய்ச்சித் தொகுதி' என்னுந் நூலுட் கூறியுள்ளார்கள். அது வருமாறு:-

"மணிபல்லவம் காவிரிப்பூம்பட்டினத்துக்குத் [3]தெற்கே முப்பது யோசனையில் உள்ளதாகச் சாத்தனர் கூறுவர். இத்தீவு இப்போது யாழ்ப்பாணப் பகுதிகளுள் ஒன்ருகவே பலராலும் கருதப்படுகின்றது. அவற்றுள்ளும் காரைத்தீவு என்ற பகுதியே மணிபல்லவமாகக் கருதப் பொருத்தம் உண்டு. இதற்கும் புகார் நகர்க்கும் பண்டைக் காலத்திருந்த தொடர்பை அடியில் வரும் அகித்தி [4]ஜாதகக் கதையால் அறியலாம்."

"காசியிலே, பெருஞ் செல்வமுடைய பிராமண குடும்ப மொன்றிற் பிறந்த அகித்தி என்பார், தம் தந்தை இறந்

---

1. பக்கம் 74. ஆசிரியர்: திருமந்திரமணி, துடிசைகிழார் அ. சிதம்பரனர்
2. பக்கம்: 222
3. மணிமேகலை; 10, 57.
4. The Jataka Vol, V, P. 150

ததும் தமக்குக் கிடைத்த செல்வம் முழுவதையும் ஏழுநாளில் தானதருமங்களிற் செலவுசெய்துவிட்டுத் துறவியாய்த் தம் சகோதரியுடன் தமிளராஜ்யத்துக்குச் சென்று காவேரிப்பட்டினத்தில் உள்ள உபவனமொன்றில் தங்கித் தியானத்திலிருந்தவர் என்றும், பின் அவ்விடமும் அவர்க்கு ஏற்றதாகாமையால், ஆகாச வழியே நாகதீபத்தின் வடபாலுள்ள காரைத்தீவிற்குச் சென்று, அங்கிருந்த காரை மரத்தின்கீழ்க் குடில் அமைத்துக்கொண்டு அதனுளிருந்து தனியே நோற்று வந்தனர் என்றும், அவரது அருஞ்செயல்கள் இந்திரனது பளிங்காசனத்தை நடுங்கச் செய்யவே, அவன் நேரில் வந்து அவரது பெருமையை அறிந்து உரியவற்றைச் செய்து சென்ருன் என்றும் அந்த ஜாதகம் கூறுகின்றது. இலங்கையை நாகதீபம் என்ற பெயரால் ஜாதகங்கள் பலவும் வழங்கும்.

காரைநகர் தொடர்பான வரலாறுகள் இன்னும் பலவுண்டு. அவைகளையெல்லாம் 1 'காரைநகர் மான்மியம்' என்னும் நூல் விரிவாக எடுத்துக் கூறுகின்றது.

தமிழ் மன்னர் காலத்தில் காரைநகர் மிக்க சிறப்புற்று விளங்கியது. தமிழ்மொழி வடமொழிகளில் வல்ல அறிஞர்கள் திண்ணைப் பாடசாலைகளை அமைத்துக் கல்வி பயிற்றி வந்தனர். சமயம், இலக்கியம், மருத்துவம், சோதிடம் முதலிய கலைகள் பேணப்பட்டன. காலம் உருண்டோடிற்று.

## குளக்கோட்டன் பணி:

சில காலங்களில் இலங்கை, தமிழ் நாட்டு அரசர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது. அவர்கள் சைவசமய வளர்ச்சிக்கு மகத்தான தொண்டு இயற்றினர். சோழ தேசத்திலிருந்து இங்கு வந்த குளக்கோட்டு மன்னனும் சிறந்த பணிகளை இயற்றியுள்ளான். இவனுல் காரைநகரில் வியாவில் என்னும் பகுதியில் ஐயனர் கோயிலொன்று அமைக்கப்பட்டது. இதுவே சோழர் காலச் சிற்ப முறைப்படி காரைநகரில் முதன்முதல் அமைக்கப்பட்ட கோயிலாகும். இக்கோயில் மிகப் பிரமாண்டமானது; வானளாவிய கோபு

1. ஆசிரியர்: வித்துவான் எவ். எக்ஸ். ஸி. நடராசா

ரங்களுடன் கூடியது. நயினுதீவு நாகபூஷணி அம்பாள் கோயிற் கோபுர உச்சியில் வைக்கும் தீபஒளி வியாவில் ஐயனுர் கோயிலுக்கும், ஐயனுர் கோயிற் கோபுர உச்சியில் வைக்கும் தீபஒளி பொன்னுலே வரதராஜப் பெருமாள் கோயிலுக்கும், இக்கோயிற் கோபுர உச்சியில் வைக்கும் தீபஒளி மாவைக் கந்தன் கோயிலுக்கும் தெரியுமென்று தமது முன்னேர் கூறியதாக எமது பேரனுர் சிவஸ்ரீ சு. சரவணபவக் குருக்கள் கூறியுள்ளார்.

குளக்கோட்டு மன்னன், திருவுத்தரகோசமங்கையிலிருந்து மங்களேஸ்வரக் குருக்களையும் சுந்தரேஸ்வரக் குருக்களையும் அழைப்பித்து ஐயனுர் கோயிற் கும்பாபிடேகத்தை நடத்துவித்தான் என்பதும், அதனேடு அமையாது, செப்புத் தகட்டில் 1சாதனம் ஒன்றையும் எழுதிக் கொடுத்து அவர்களையே அருச்சகர்களாக நியமித்தான் என்பதும் வரலாறு.

அன்றியும் அவன், தென்னட்டிலிருந்து வேதம் வல்ல அந்தணர்களையும், ஓதுவார்களையும், சித்தாந்த வித்தகர்களையும் அழைப்பித்தான். வேதநெறி தழைத்தது. மிகு சைவத் துறை விளங்கியது. கோயிலில் கிரியை முறைகள் விளக்கமடைந்தன. வேதமந்திரங்களும் திருமுறைகளும் இன்னிசையாக ஒலித்தன. புராண படனங்கள் நடைபெற்றன. எங்கும் திருநீறும் உருத்திராக்கமும் விளக்கமடைந்தன. சைவசமயம் என்னும் அழகிய மலரானது பூத்துப் பொலிய, அம் மலரினின்றும் தமிழாகிய வாசனை எங்கும் வீசியது.

## இருண்ட காலம்:

இந்நிலையில், போர்த்துக்கேயர் இலங்கையின் கரைப்பகுதிகளைக் கைப்பற்றினர். இலங்கையை இருள் சூழ்ந்து கொண்டது. சைவமக்கள் சிலர் கிறிஸ்தவர்கள் ஆக்கப்பட்டனர் காரைநகரில் கிறிஸ்த தேவாலயங்கள் இரண்டு அமைக்கப்பட்டன. சைவசமய வழிபாடு, பூசை முதலியன செய்யப்படலாகாதெனத் தடை விதிக்கப்பட்டது. தடையை மீறு

---

1. சாதன வாசகங்கள், சிவஸ்ரீ ச. கணபதீசுவரக்குருக்களின் வம்ச வரலாற்று ஏட்டில் உண்டு.

வோர் தண்டனைக்குள்ளாவார் என்றும் கட்டளை பிறப்பிக் கப்பட்டது. எனினும், மக்கள் தங்கள் தெய்வ வழிபாடுகளை யும் சைவ அநுட்டானங்களையும் கைவிட்டார் அல்லர். அகத்தே சைவராயும் புறத்தே கிறிஸ்தவராயும் நடித்தனர் பலர். புறத்தேதானும் கிறிஸ்தவராக வாழமாட்டோம் என்று உயிர் நீத்தோரும் உளர். இங்கு வாழ விரும்பாது அந்நிய தேசஞ் சென்றவரும் உண்டு. ஒவ்வொருவரும் சிலுவை அணிந்து கொள்ள வேண்டும் என்பதும் கட்டா யமாக்கப்பட்டது. கோயில்கள் பல இடித்துத் தரைமட்ட மாக்கப்பட்டன. இவ்வகையில் அவர்கள் வியாவில் ஐயனார் கோயிலையும் இடிக்க வந்து, கோயில் வாயிலைத் திறந்தனர். அவ்வளவுதான். அவர்கள் வாயிலிருந்து இரத்தம் பெருகத் தொடங்கியது. அவர்களும் இறந்துவிட்டனர். இந்நிகழ்ச்சி மீண்டும் கோயிலைத் தகர்க்கும் முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பதாயிற்று. போர்த்துக்கேயர் வந்து சில காலத்தின் பின் கொடிய வைசூரிநோய் காரைநகரிற் பரவத்தொடங் கியது. அதனால் பலர் மாண்டொழிந்தனர். அப்போது மணற் காடு என்னும் இடத்தில் ஒரு முத்துமாரி அம்பாள் கோயில் அமைக்கப்பட்டுப் பூசை திருவிழா என்பன செய்து முடிய வைசூரியும் குறைந்து விட்டது.

பின்னர் ஒல்லாந்தர் ஆட்சி தொடங்கியது. அவர்களும் சைவசமயிகளுக்கு அளவற்ற இன்னல்களை இழைத்து வந் தனர். அதுகுறித்து அக்காலத்தில் வியாவில் ஐயனார் கோயி லுக்கும், மணற்காடு முத்துமாரி அம்பாள் கோயிலுக்கும் அருச்சகராயிருந்த சிவஸ்ரீ சூ. கனகசபாபதிக் குருக்கள் எழுதி வைத்துள்ள குறிப்பினை அப்படியே இங்கே தருகின்றோம்.

"ஒல்லாந்தர் ஊர்காவற்றுறையைப் பிடித்த ஒரு மாசத்திற்குள் அநேக சைவசமயக் கோயில்களையும் இடித்து விட்டு, இந்த ஐயனார் கோயிலையும் இடிக்க வந்தபோது நான்கு பேர் கண் தெரியாதவர்களாயும், இரண்டு பேர் நடக்கமாட்டாதவர்களாயும் போனார்கள். இது நடந்து கொஞ்சக் காலத்தின்பின் எங்களைப் பூசை செய்ய விடாது தடுத்தனர். அவர்கள் போன பிற்பாடு விக்கிரகங்கள் எல்லாவற்றையும் நில அறையில் வைத்துப் பூசை செய்து வரும்போது ஒருநாள் வந்து கோயிலையும் இடித்து, கோயிற் கற்களைக் கொண்டு கடலுக்குள்ளே ஒரு கோட்டையையும் கட்டினார்கள்."

''அதன்பின் நில அறையில் விக்கிரகங்களுக்குப் பூசை செய்வதை அறிந்து சுவாமி எல்லாவற்றையும், கோயிற் சாமான்கள் சகலதையும் கிணற்றுக்குள்ளே போட்டு 'வீரன்' என்பவனையும் வெட்டிப் பலி கொடுத்துப் போய்விட்டார்கள். தேரையும், வாகனங்களையும் கடலிலே விட்டுவிட்டனர். ஆபரணங்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டார்கள்.''

''இப்படியிருக்கும் காலத்தில் எனக்குப் பிள்ளை பிறந்தது. அவர்களுக்கு அறிவிக்கவேண்டிய கட்டளைச் சட்டம் இருப்பதால் அவர்களுக்கு அறிவித்தேன். அவர்கள் வந்து தண்ணீர் தெளித்து, 'தாமன்' என்னும் பெயர் வைத்துப் போய்விட்டார்கள். குருக்கள் என்று பெயர் வைக்கப்படாதென்றும் சொன்னுர்கள். எங்கள் சாதியில் குரு இருக்கிறதேயன்றி மற்றச் சாதியில் இருக்கப்படாதெனவும் சட்டம் வைத்து இருந்தபடியால் எங்களுக்குரிய கிரியைகளை இரகசியமாய் முடித்து, 'தாமோதர ஐயர்' எனப்பெயர் வைத்து வளர்த்து வந்தேன்.''

''சைவசமயம் என்ற பேச்சு அவர்களின் காதிற் கேட்கப்படாது. விபூதியும் பூசப்படாது. நான் பகலில் எங்களுக்குரிய காணிகளை உழுவித்து வேலை செய்து, பொழுது போனபின் வீடுவந்து இரகசியமாய் வீட்டுக்குள்ளிருந்து பூசை முதலியவைகளை முடித்தபின்பே சாப்பிடவேண்டும். இந்தக் கொடுமைகளைச் தாங்க ஏலாது பரிசாதகத்திற்கு வந்த வடகலை வைஷ்ணவப் பிராமணர்களும் சமுசாரமும் பிள்ளைகளும் இந்தியாவிற்குப் போய்விட்டார்கள். நான் வியாவில் என்னும் இடத்தைவிட்டு மணற்காடு மாரியம்மன் கோயிலடியில் வந்து இருந்தேன். மாரியம்மன் கோயிலையும் இரண்டுமுறை இடிக்க வந்தும் அம்மை நோயின் பயத்தால் இடிக்காமல் போய்விட்டார்கள்.''

''என்னையும் பூசைசெய்யப்படாதெனத் தடுத்தனர். நான் 'ஒருநேரப் பூசை தவறினுலும் முத்துமாரி, அம்மை வருவிப்பாள். அதற்குச் சாட்சி கோயிலிடிக்க வந்தபோது உங்களுக்குத் தெரியும். உங்களுக்கேயன்றி இங்கேயுள்ள மற்றவர்களுக்கு அம்மை வந்ததில்லை' என்று சொல்ல ஒன்றும் பேசாது போய்விட்டார்கள்.''

ஒல்லாந்தர் செய்த இன்னல்களை ஈழத்துச் சிதம்பர புராணமும்

1"திருநீறு பூசுவதுங் குற்றங் குற்றஞ்
சிவபூசை காணுமற் செய்தல் குற்றம்
அருமைந்தர் தமக்கரனு ரருளி ஞமம்
அமைப்பதுவும் வழங்குவது மந்தோ குற்றம்
திருக்கோயிற் பூசனைகள் செய்தல் குற்றம்
சீர்விரதங் கொள்ளுவதுந் தீராக் குற்றம்
பொருவறுசீர்ச் சைவருக்கொல் லாந்தர் செய்த
புன்மைகளை யம்மம்மா சொல்லப் போமோ."

என்று கூறுகின்றது.

இத்தகைய துன்பச் சூழ்நிலையிலும் காரைநகர் மக்களிற் பெரும்பாலானோர் தமது சைவ ஆசாரங்களையும் பழக்க வழக்கங்களையும் மாற்றிக்கொண்டாரல்லர். ஐயனார் கோயிலொன்றை ஒல்லாந்தர் இடித்த செயலால் சைவமக்கள் வீடுகள் தோறும் கோயில்கள் தோன்றின. அவர்கள் வைரவ சூலம் முதலியவற்றை வைத்து இரவில் மிக இரகசியமாக வழிபட்டு வந்தனர்.

ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதிக் காலத்தில் இந்தியாவினின்றும் வந்து காரைநகரிலிருந்த சுப்பையர் என்னும் பேரறிஞர், மாணவர்களுக்கு இரகசியமாகச் சைவசமய நூல்களைக் கற்பித்து வந்தார்; திருமுறைகளைப் பண்ணோடு ஓதவும் பயிற்றினர். இவரால் இயற்றப்பட்ட 'காரைக்குறவஞ்சி' 'நல்லைநாயகர் நான்மணிமாலை' என்னும் நூல்களில் சித்தாந்தக் கருத்துக்கள் நிரம்பப் பயின்று வந்துள்ளனவென அறிஞர்கள் கூறுவர்.

## காரைமாநகர் கோயில் மாநகராதல்:

ஒல்லாந்தர் ஆட்சியின்பின் 1796 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கியது. அவர்கள், போர்த்துக்கேயர் ஒல்லாந்தர்களைப் போலல்லாது மக்களுக்குச் சிறிது சமய சுதந்திரம் வழங்கினர். சைவசமய வளர்ச்சிக்கு ஆலயங்களே சிறந்த சாதனங்கள் என்றுணர்ந்த சைவர்கள் இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி ஆலயங்களை அமைத்தனர். அவற்றுள் மிகமிக

1. ஐயனார் கோயில்காண் சருக்கம் – 12

முக்கியமானது ஈழத்துச்சிதம்பரம் என வழங்கும் காரைநகர்ச் சிவன்கோயிலாகும். (ஆண்டிகேணி ஐயனர் கோயில் 1770க்கு முன்னர் அமைக்கப்பட்டது.) இச் சிவன்கோயில், காரைநகரில் உள்ள கோயில்கள் அனைத்திற்கும் எடுத்துக்காட்டாக இருந்து வருகின்றது. இக்கோயில் சைவத்தை வளர்க்கும் பணியில் பெரும்பங்கு வகிக்கின்றதென்றால் அது மிகை யாகாது. காரைமக்கள் ஒவ்வொருவரும் இக்கோயிலைத் தமது உயிரினும் மேலாகக் கருதித் தொண்டாற்றி வருகின்றனர். இங்கே வருடத்தில் மூன்றுமுறை மார்கழி, பங்குனி, ஆடி ஆகிய மாதங்களில் பெருவிழாக்கள் நடைபெறுகின் றன. இவற்றுள் மார்கழி மாத விழாவே - திருவாதிரை விழாவே - சிறப்புவாய்ந்ததாகும். தில்லைத் தலத்திலே நிகழ்வதுபோல இங்கும் நடராஜப் பெருமானின் ஆதிரை விழா முறைதவறாது சிறப்பாக நடைபெறுகின்றது. இவ் விழாவினைக் கண்டு இட்டசித்திகளைப் பெறுவதற்காக இலங் கையின் பலபாகங்களிலிருந்தும் சைவ அடியார்கள் வரு கிறார்கள்.

இலங்கையில், ஏன் இந்தியாவிலுமே எந்தக் கோயிலி லுமில்லாத சில ஐதிகங்கள் இந்தக் கோயிலில் உண்டு. இங்கே சுவாமிக்கு நிவேதனம் செய்யப்படும் திருவமுதையும் பணி கார வகைகளையும் உப்புப் போடாதே செய்கின்றார்கள். சுத்தமான உரலிலே துவைத்து எள்ளிளைப் பிழிந்து எடுத்த எண்ணெயையே சுவாமிக்குச் சாத்துகிறார்கள். யந்திரங்கள் குற்றும் அரிசியை நைவேத்தியத்திற்கு எடுக்கமாட்டார்கள். கைக்குத்தரிசியையே எடுக்கிறார்கள். இந்த ஒழுங்குகளெல் லாம் காரைநகர் மக்களுக்குச் சைவசமயத்திலுள்ள பெரும் பற்றையே எடுத்துக்காட்டுகின்றன. இத்திருத்தலத்தின் வர லாற்றை நவாலியூர்ப் புலவர்மணி சோ. இளமுருகனார் அவர்கள் இயற்றிய 'ஈழத்துச் சிதம்பர புராணம்' மிக விரிவாக எடுத்துக் கூறுகின்றது.

காலக்கிரமத்தில் பண்டத்தரிப்பான்புலம் சிதம்பரேஸ் வரர் கோயில், திக்கரை முருகமூர்த்தி கோயில், பலிகாடு இராஜராஜேஸ்வரி அம்பாள் கோயில், சித்திரகூடம் பிள்ளை யார் கோயில், கருங்காலி முருகமூர்த்தி கோயில், வாரிவ ளவுப் பிள்ளையார் கோயில், அரசடிக்காடு கதிர்வேலாயுத சுவாமி கோயில், பாலாவோடை அம்பாள் கோயில், பயரிக்

கூடல் சுப்பிரமணிய சுவாமி கோயில் என்னும் பெருங் கோயில்கள் அமைக்கப்பட்டன. இவைகளெல்லாம் பிரமோற் சவம் நடைபெறும் கோயில்களாகும். இவற்றைவிட முப்ப துக்கு மேற்பட்ட கோயில்களும் காரைநகரை அழகு செய் கின்றன. இக்கோயில்களுக்கெல்லாம் சைவசமயத்தை வளர்ப் பதில் பெரும் பங்குண்டு.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அமெரிக்க நாட்டுப் பாதிரிமார் யாழ்ப்பாணப்பகுதியில் கல்விப் பணியை மேற் கொண்டனர். அந்தரங்கத்தில் அவர்கள் கிறிஸ்து சமயப் பிரசாரத்தையே குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். தமது குறிக்கோளையடைய, பாடசாலைகளையும் மருத்துவமனைகளை யும் பல பகுதிகளிலும் நிறுவினர். காரைநகரிலும் இரண்டு பாடசாலைகளை அமைத்து அவற்றின் மூலம் கிறிஸ்து சமயத் தைப் பரப்பத் தொடங்கினர். படித்து உத்தியோகம் பெறும் நோக்கத்துடன் சிலர் கிறிஸ்தவரார்யினர். இதனுல் வலுவற்றிருந்த கிறிஸ்து சமயம் சிறிது தலை தூக்கத் தொடங்கியது. இதனைக் கண்டு மனம் வருந்திய முருகேசை யர் என்பவர், சைவசமய வளர்ச்சிக்கான எத்தனங்களில் ஈடுபட்டார். எனினும், பாதிரிமாருடன் போட்டியிட அவ ரால் முடியவில்லை, பாதிரிமாரின் முயற்சி மேலோங்கி நின் றது. அப்போது காரைநகர் அன்னை ஈன்ற கார்த்திகேயப் புலவர் இதனை உணர்ந்து சீறியெழுந்து சைவம் புரக்கும் பணியைத் தலைமேற்கொண்டு உழைக்கத் தலைப்பட்டார்.

## சைவம் வளர்த்த சான்றோர்:

### கார்த்திகேயப் புலவர் (*23 - 3 - 1819 -- 22 - 9 - 1898*)

இவர், நாவலர் பெருமானின் குருவாகிய இருபாலைச் சேனுதிராசமுதலியாரைத் தமக்கும் குருவாகப் பெற்றவர்; காமிகம், காரணம் முதலான ஆகமங்களை நன்கு கற்றவர்; திருமுறைகளிலும் சித்தாந்த சாத்திரங்களிலும் புராண இதிகாசங்களிலும் பிற்கால இலக்கியங்களிலும் நிரம்பிய புலமை உள்ளவர்; சோதிட அறிவும் நிரம்பப் பெற்றவர்; செய்யுள் இயற்றும் ஆற்றலும் வாய்க்கப் பெற்றவர், நாவலர் பெருமானின் சொற்பொழிவுகளை ஒழுங்காகக் கேட்டுக் குறிப்புகளும் எழுதி வைத்துக்கொள்பவர். இவர் காலத்தில் கிறிஸ்தவ பாதிரிமார் காரைநகரில் வீடுவீடாகச் சென்று

தமது சமயத்தைப் பற்றிப் போதித்து வந்தனர். இதனால் சைவமக்கள் சிலர் கிறிஸ்தவராயினர். இதனைக்கண்டு சீறியெழுந்த புலவர், 'கிறிஸ்து மதகுடாரம்' என்னும் நூலை வெளியிட்டுக் கிறிஸ்தவர்களின் கொட்டத்தை ஓரளவு அடக்கினார். 1852ஆம் ஆண்டு ஒரு திண்ணைப் பாடசாலையையும் ஆரம்பித்துச் சைவசமய நூல்களைக் கற்பித்து வந்தார்.

புலவர், 'விதானமாலை' என்னும் சோதிட நூலைத் திருத்தி உரையில்லாத பாட்டுகளுக்கு உரையுஞ் செய்து 1881ஆம் ஆண்டு வெளிப்படுத்தினர். சித்தாந்தக் கருத்துக்கள் நிரம்பிய பல நூல்களும் அவரால் இயற்றப்பட்டன. [1] திக்கைத்திரிபந்தாதி, [2] திருப்போசைவெண்பா என்பன அவற்றுட் சிலவாகும்.

புலவருடைய எதிர்ப்பினால் சிறிது காலம் தளர்ச்சியடைந்திருந்த கிறிஸ்தவர்கள், பின்னரும் தமது சமயத்தைப் பரப்புவதற்கு மிகமிக உக்கிரமாக முயற்சி செய்தனர். இதனைக் கண்டு கொதித்தெழுந்தார் ஒரு மகான். அவர்தாம் காரைநகர் மடத்தை தவம் வாய்ந்ததென வந்த அருணாசலம்.

## பெரியார் அருணாசலம்:

[3]"அவர்களுக்குப் பிறகு அருணாசலந்தான் இந்த நாட்டில் ஒரு மனிதர்" என்று நாவலர் பெருமானின் தமையனார் மகனாகிய ஸ்ரீமத் த. கைலாசபிள்ளை அவர்களால் பாராட்டப்பட்டவர் சைவப்பெரியார் அருணாசலம் அவர்கள். அவர்கள் என்றது நாவலர் அவர்களை. மேலும், பிள்ளை அவர்கள், [4]"யாழ்ப்பாணத்திலுள்ள சைவ ஆசிரிய கலாசாலைக்கு முதற்காரணம் ச. அருணாசலமே. பரோபகாரிக

---

1. களபூமியிலுள்ள திக்கரை என்னுமிடத்தில் எழுந்தருளியிருக் முருகப்பெருமான்மீது பாடப்பட்டது. 1871.
2. கருங்காலியினுள்ள போசுட்டி என்னுமிடத்தில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமான்மீது பாடப்பட்டது. 1897
3. யாழ்ப்பாணத்தின் மூன்று சமயக் கண்கள். – இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை.
4. காரைநகர்ச் சைவமகாசபைப் பொன்விழா மலர். 1967.

ளென்று யாழ்ப்பாணத்திற் பிறந்தவர்களுள் இரண்டாவ தாக யான் மதித்திருப்பது இவரையே. மூன்றுவதாகச் சொல்வதற்கு ஒருவருமிலர்'' என்றுங் கூறியுள்ளார்.

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள், ''யாழ்ப்பாணத்தின் மூன்று சமயக் கண்களுள், பெரியார் அருணுசலமும் ஒருவர்'' என்றும், [1] ''ஸ்ரீமான் அருணுசலம் அவர்கள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் சிந்தனைகளுக்கும் இந்த நூற்றுண்டின் சைவ எழுச்சிக்கும் இடையில் அமைந்ததொரு சேதுபந்தனம் ஆவார்கள்'' என்றும், [2] ''நாவலர் இட்ட வித்தை முப்பது வருடங்களுக்கு மேலே பாதுகாத்து, முளைவரச் செய்தார் மகான் அருணு சலம்'' என்றும், [3] ''1913 தொடக்கம் 1922 வரை வெளி வந்த, இலங்கையிலுள்ள திருநீறு பூசுகிற பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அனைவரும் அருணுசலம் பொரித்த குஞ்சுகளே யாவர்'' என்றும் புகல்வர்.

தெல்லிப்பளையில் கிறிஸ்த ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த அருணுசலம், ஞானஸ் நானம் பெறுவதற்குக் கடத்திக்கொண்டிருந்தார். 1885இல் ஆசிரிய பயிற்சிப் பத்திரம் பெறுங்காலம் நெருங்கிக் கொண் டிருந்தது. ''இதோ பிடி ஞானஸ்நானம்! ஓ! அஞ்ஞானி யே!'' என்ற வற்புறுத்தல் மேலோங்கி நின்றது. ஞானஸ் நானம் பெற மறுத்து நள்ளிரவில் மதிலில் ஏறிக்குதித்து வீடு வந்த சேர்ந்தவர் இந்த அருணுசலம். இவ்வியத்தகு நிகழ்ச்சியை ஈழத்துச் சிதம்பர புராணம்,

[4] ''.... .... ... .... ... .... .... ... ... .... .... .... ....
அம்மம்ம வதற்கஞ்சி நள்ளிரவி
லப்பள்ளி யகன்று போந்தான்
வெம்மையமண் பள்ளிநின்றுஞ் சொல்வேந்தர்
வெளிப்பட்ட விதமே போன்று''

என்று கூறுநிற்கும்.

---

1. யாழ்ப்பாணத்தின் மூன்று சமயக் கண்கள்
2. யாழ்ப்பாணத்தின் மூன்று சமயக் கண்கள்
3. 10 - 4 - 79இல் இந்துசாதனத்தில் வெளிவந்த கட்டுரை
4. காரைவளச் சருக்கம். 130

இவர் காலத்தில் சைவர்கள் ஆசிரியப் பயிற்சி பெறுவதாயின் பயிற்சிக் காலம் முடிவதற்கு முன்னர் கிறிஸ்து சமயத்தைத் தழுவவேண்டுமென்ற நியதி இருந்தது. அதனை மாற்றி, சைவர்களும் கத்தோலிக்கர் தவிர்ந்த ஏனைய மூவகைக் கிறிஸ்தவர்களும் ஒருங்கு இணைந்து தத்தஞ் சமயத்தை அநுட்டித்தவாறே பயிற்சி பெறுவதற்கு வாய்ப்பாகக் கோப்பாயில் ஐக்கிய போதனா பாடசாலை தோன்றுவதற்கு மூலகாரணராய் விளங்கியவர் பெரியார் அருணாசலம் ஆவர். நிற்க.

சைவப்பிள்ளைகள் கிறிஸ்தவ பாடசாலைகளில் கல்வி பயிலுவதையும், அங்கே பைபிள் வற்புறுத்திக் கற்பிக்கப் படுவதையும் அருணாசலம் கண்டார்; அன்றியும் மாணவர் கிறிஸ்தவ ஆலயத்திற்குச் (Church) செல்ல வேண்டுமென நிர்ப்பந்திக்கப்படுவதையும், ஆலயத்தில் உபதேசிமார் செய்யும் பிரசங்கங்களையும் அவதானித்தார்; சைவர்கள் கிறிஸ்து சமயத்தைத் தழுவுவதையும் தெரிந்துகொண்டார். இவற்றால் அவரது தூய உள்ளம் துடிதுடித்தது.

நாவலர் பெருமான், [1] ''நிலையில்லாத என் சரீரம் உள்ள பொழுதே என் கருத்து நிறைவேறுமோ நிறைவேறாதோ என்னுங் கவலை என்னை இரவும் பகலும் வருத்துகின்றது. அக்கருத்து இது. தமிழ்க் கல்வியும் சைவசமயமும் அபிவிருத்தியாதற்குக் கருவிகள் முக்கியஸ்தலந்தோறும் வித்தியாசாலை தாபித்தலும் சைவப் பிரசாரணஞ் செய்வித்தலுமே யாம். இவற்றின் பொருட்டுக் கிரமமாகக் கற்றுவல்ல உபாத்தியாயர்களும் சைவப்பிரசாரகர்களும் வேண்டப்படுவார்கள்'' என்று கூறிய நல்லுரை, பெரியார் அருணாசலத்தின் நினைவுக்கு வந்தது. வந்ததும் அப்பெரியார், ''தமிழும் சைவமும் குன்றிய காலத்தில் நாவலர் பெருமான் அவ்விரண்டிற்குந் தொண்டுசெய்து அழியாப் புகழ்பெற்றுச் சிவானுபூதி அடைந்துள்ளார். அவர் வழியில் யானும் தொடர்வேன்'' என்று உறுதி பூண்டு சைவப் பாடசாலைகளை உருவாக்குவதற்குக் 'கொடுக்கு'க் கட்டினார்.

---

1. ஆறுமுகநாவலர் சரித்திரம் ஸ்ரீமத் த. கைலாசபிள்ளை - பக்கம்: 50

பெரியார், 1889 ஆம் ஆண்டு சிவபுண்ணியச் செல்வராகிய திரு. சி. சுப்பிரமணியம் என்பவரது நிலத்தில், அவரதும் வேறு சில அன்பர்களினதும் உதவியுடன் சுப்பிரமணிய வித்தியாசாலையை அமைத்தார். இதுவே காரை நகரில் முதன்முதல் அமைக்கப்பட்ட சைவத்தமிழ்ப் பாடசாலையாகும். இப்பாடசாலையில், திருவாளர்கள் த. நாகமுத்துப்புலவர், சி. தில்லையம்பலம் என்போர் ஆசிரியர்களாக அமர்ந்து நற்பணியாற்றினர். அதே ஆண்டில் சயம்புவீதியைச் சேர்ந்த திரு. கோவிந்தபிள்ளையினது நிலத்தில், அவராலும் மற்றுஞ் சில அன்பர்களாலும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் ஆங்கில வித்தியாசாலை, அருணுசலம் அவர்களின் ஆலோசனைப்படி ஆரம்பிக்கப்பட்டது. இவ் வித்தியாசாலையில் சயம்பு என்னும் பெரியார் ஆசிரியராகத் தொண்டு புரிந்தார். சயம்பு ஆசிரியர் பாடசாலை வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாய் இருந்து வந்தார். அதனுல் அப்பாடசாலை சயம்பு பாடசாலை என அழைக்கப்படலாயிற்று. அது இந் நாளில் காரை இந்துக்கல்லூரி என நின்று அறிவொளி பரப்பி வருகின்றது.

பெரியார் சயம்பு, தமது வாழ்நாள் முழுவதையும் பாடசாலை வளர்ச்சிக்கு அர்ப்பணித்ததோடு அமையாது சமயசமூகப்பணிகளிலும் ஈடுபட்டார். இளஞ் சிறுர்கள் சைவவாழ்வு வாழவேண்டும் என்ற பெருங்கோட்பாட்டினுல் மாணவர்களை வெள்ளிக்கிழமைதோறும் ஈழத்துச் சிதம்பர ஆலயத்திற்கு அழைத்து வந்து, வழிபாடு பிரார்த்தனை முதலியவற்றிற் கலந்துகொள்ளச் செய்தார். காரை நகரின் முன்னேற்றத்தின் முன்னுேடியான இவரது சிலை கல்லூரியை அலங்கரிப்பதுடன் அமையாது, காரை மக்களின் நன்றியுணர்வினை நாடறிய நவின்று கொண்டிருக்கின்றது. நிற்க.

பெரியார் அருணுசலம் அவர்களால் வியாவில் என்ற இடத்தில் 1890 ஆம் ஆண்டு பிரமஸ்ரீ கா. வேதக்குட்டி ஐயரின் உதவியோடு அவரது நிலத்தில் சைவபரிபாலன வித்தியாசாலை அமைக்கப்பட்டது. அன்றியும் அவர், சில காலம் பாடசாலைகளில் ஆசிரியராகவும் பணிபுரிந்தார். வண்ணுர்பண்ணை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் இரண்டு ஆண்டுகள் அதிபராகப் பணி

யாற்றிய சிறப்பும் உடையவர் பெரியார் அருணுசலம். அருணுசலம் அவர்களின் சீரிய தொண்டால் காரைமண்ணில் சைவப்பயிர் நன்கு வேரூன்றலாயிற்று. மதம்மாற எண்ணியிருந்தவர்கள் அவரது போதனையால் தங்கள் எண்ணத்தைக் கைவிட்டனர். திருநீற்றின் ஒளியும் திருமுறைகளின் ஒலியும் எங்கும் பரவலாயின.

சைவப் பாடசாலை எதுவுமின்றி இருந்த காரைநகரிலே முப்பெரும் பாடசாலைகள் தோன்றியமையும், அப்பாடசாலைகளுக்கு மாணவர் விரும்பிச் செல்வதுமாய நிகழ்ச்சிகள் பாதிரிமாருக்குப் பெரும் வேதனையைத் தந்தன. சைவப் பாடசாலைகளுக்கு எதிராகப் பல முட்டுக்கட்டைகளை இட்டனர். கிறிஸ்து சமயப் பிரசாரத்தை முன்னரிலும் பன்மடங்கு கூடுதலாகச் செய்தனர். அரசாங்கமும் அவர்களுக்குச் சாதகமாய் இருந்தது. இந்நிலையிலும் கிறிஸ்தவர்கள், எதிர்பார்த்த அளவு பயன் எதுவும் பெறவில்லை. காரைநகரில் மேலும் சைவப்பாடசாலைகள் தோன்றிவண்ணம் இருந்தன. திருவாளர்கள் ஆ. சங்கரப்பிள்ளை, க. சுப்பிரமணியம் என்போர் களபூமியில் சுந்தரமூர்த்தி நாயனுர் வித்தியாசாலையை நிறுவினர். ஆயிலியில் திரு. ப. சண்முகம் என்பவரால் சிவஞானேதயவித்தியாசாலையும், பாலாவோடையில் திரு ஆ. ச. சங்கரப்பிள்ளை அவர்களால் மாணிக்கவாசகர் வித்தியாசாலையும் அமைக்கப்பட்டன. 1947ஆம் ஆண்டு காரைநகர்க் கல்வி அபிவிருத்திச் சபையினரால் யாழ்நகர்க் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. சைவவித்தியாவிருத்திச் சங்கத்தினரும் மெய்கண்டான் வித்தியாசாலையையும், மறைஞானசம்பந்தர் வித்தியாசாலையையும் அமைத்தனர். இப்பாடசாலைகளுக்கெல்லாம் சைவத்தை வளர்க்கும் பணியில் பெரும் பங்குண்டு. சைவப்பெரியார் அருணுசலத்தைத் தொடர்ந்து சமயப் பணியில் ஈடுபட்டவர் அவரது மாணவராகிய சிவஸ்ரீ ச. கணபதீஸ்வரக்குருக்களாவர்.

## சிவஸ்ரீ ச. கணபதீஸ்வரக் குருக்கள் (10.3.1888 -- 13.3.1967)

ஈழத்துச் சிதம்பரத்தை மையமாக வைத்து அரை நூற்ருண்டிற்கு மேலாகச் சைவப்பயிரை வளர்த்து வந்த சிறப்புக்குரியவர் இவர். 64 ஆண்டுகளாக ஈழத்துச் சிதம்பரத்தில் ஆசாரியராக இருந்து தமது உடல், பொருள், ஆவி

என்னும் மூன்றையும் சுந்தரேஸ்வரப் பெருமானுக்கு அர்ப் பணித்த குருக்கள், வேதங்களையும் ஆகமங்களையும் எழுத் தெண்ணிப் படித்தவர். மகாவித்துவான் சி. கணேசையர் அவர்கள் இவரை,

1 "வடமொழி யறிவின் மிக்கு மன்னுமா கமமும் தேர்ந்து
புடவியிற் கோயிற் கேற்ற கிரியையிற் புலமை மிக்கே
கடமைகள் வழுவா தாற்றுங் கணப தீஸ்வரப்பேர் பூண்ட
குடமுனி போல்வி ளங்குங் குரு ... ... ... ... ..."

என்று பாராட்டியுள்ளார். உபநிஷதங்களிலும் திருவாசகத் திலும் இவருக்கு நிரம்பிய ஈடுபாடு உண்டு.

ஆலயக் கிரியைகளைச் செய்வதில் ஈழத்தில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த இவரது இல்லம், ஒரு சமயச் சர்வ கலாசாலை போன்றே விளங்கியது. சமய சம்பந்தமான சந் தேகங்களைத் தீர்த்துக்கொள்ளுவதற்கு இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் அறிஞர்கள் இங்கே வந்து கொண்டிருந் தார்கள். அவர்களின் சந்தேகங்களைத் தீர்ப்பதன் மூலம் குருக் கள் சமயக் கருத்துக்களைப் பரப்பி வந்தார். பத்திரிகைகளில் இவர் எழுதியுள்ள சமயக் கட்டுரைகள் அறிஞர்களுக்குப் பெருவிருந்தாயின. அகில இலங்கைச் சைவசமயக் குருமார் சபைத் தலைவராக 14ஆண்டுகள் தொடர்ச்சியாக இருந்து பெரும்பணி ஆற்றிய குருக்கள், திருக்கேதீஸ்வரக் குருகுல பஞ்சாயத்துச்சபையிலும் சேர். கந்தையா வைத்தியநாதன், அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள், கொக் குவில், சைவப் பெரியார் த. குமாரசுவாமிப்பிள்ளை, யாழ்ப் பாணம் வைத்தீஸ்வரவித்தியாலய முன்னாள் அதிபர் திரு ச. அம்பிகைபாகன் என்னும் பெரியாரோடு அங்கத்தவரா யிருந்து செய்த சேவைகள் பற்பல. இவரால் எழுதப்பட்ட 2 'ஈழத்துச் சிதம்பரம்' என்னும் நூல் சமய வரலாற்றுப் பிரியர்களுக்குப் பெருவிருத்தாயமைந்துள்ளது.

சிவஸ்ரீ ச. கணபதீஸ்வரக்குருக்கள் சமய வளர்ச்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது இராமலக்குமணர் போன் றிருந்து சமயத்துக்குப் பெரும்பணியாற்றி வந்த பெரியாரும் இருவர் உளர். ஒருவர், பண்டிதர் சிவஸ்ரீ ச. பஞ்சாட்சரக் குருக்கள். மற்றவர் ஸ்ரீமத் சி. சுப்பிரமணிய தேசிகர்.

---

1. ஆன்ம தர்சனம் – 1967 பக்கம்: 31
2. காரைநகர்ச் சிவன்கோயில் வரலாற்றை மிக விரைவாக எடுத்துக்கூறுவது 1962

பண்டிதர், சிவஸ்ரீ ச. பஞ்சாட்சரக் குருக்கள் (1889 — 1953)

நாவலர் காவிய பாடசாலையில் சுன்னுகம் அ. குமார சுவாமிப்புலவரிடம் கற்றுப் பண்டிதர் பரீட்சையிற் சித்தி பெற்ற இவர், பயிற்றப்பட்ட ஆசிரியருமாவர். கொழும்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையில் தென்கோவை, பண்டிதர் ச. கந்தையபிள்ளை அவர்களைத் தமது ஆசிரியராகக் கொண்ட குருக்கள், சித்தாந்த சாத்திரங்களிலும் வல்லவர்; வடமொழி அறிவும் நிரம்ப உள்ளவர்; செய்யுள் இயற்றும் ஆற்றலும் வாய்க்கப் பெற்றவர். புராணங்களுக்குப் பொருள் விரித்துரைப்பதிலும், சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதிலும் மிகச் சமர்த்தர். 30 ஆண்டுகள் சுப்பிரமணிய வித்தியாசாலை அதிபராயிருந்து சமயப்பயிரை வளர்த்துவந்தபெரியார்இவர். ஆலயக் கிரியைகளையும் முன்னின்று நடத்திப் பாராட்டைப் பெற்றவர் குருக்கள். இவர் இயற்றிய [1]திண்ணபுர வெண்பா, [2]மருதடி விநாயகர் இரட்டைமணிமாலை முதலாம் நூல்களில் சித்தாந்தக் கருத்துக்கள் மிக்கிருப்பதைக் காணலாம். இப் பெரியாருடன் சுப்பிரமணிய வித்தியாசாலையில் கற்பித்து வந்தவர் ஸ்ரீமத் சி. சுப்பிரமணிய தேசிகர் அவர்கள்.

ஸ்ரீமத் சி. சுப்பிரமணிய தேசிகர் (1886 — 1970)

இப்பெரியார், மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலையில் பிரம்மஸ்ரீ திரு. நாராயண ஐயங்கார் அவர்களிடம் இலக்கண, இலக்கிய, தருக்க நூல்களை நன்கு கற்றுப் பாண்டித்தியம் பெற்றவர். 1938ஆம் ஆண்டு யாம் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்குச் சென்றிருந்தபோது ஐயங்கார் அவர்கள், ஈழத்தைச் சேர்ந்த அறிஞர்கள் மூவரை மிக வியந்து பாராட்டினார்கள். அவர்களுள் ஒருவர் ஸ்ரீமத் தேசிகர் அவர்கள். இப்பெரியார், சித்தாந்த சாத்திரங்களில் நிரம்பிய அறிவுள்ளவர்; திருமுறைகளிலும் வல்லுநர்; செய்யுள் இயற்றும் ஆற்றலும் உள்ளவர். இவர், சமயப் பிரசங்கங்கள் செய்தும் சமய வகுப்புக்கள் நடத்தியும், புராணங்களுக்குப் பொருள்

1. ஈழத்துச் சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் சுந்தரேஸ்வரப் பெருமான்மீது பாடப்பட்டது.

2. வலந்தலையிலுள்ள மருதடியில் எழுந்தருளியிருக்கும் வீரகத்தி விநாயகர்மீது பாடப்பட்டது.

விரித்துரைத்தும் சமயத்தை வளர்த்து வந்தார். [1]திருவெம்பாவைக்கும் [2]திருப்பள்ளியெழுச்சிக்கும் இப்பெரியார் எழுதிய உரைகள் மிகமிக வியந்து பாராட்டப்படுகின்றன. பூர்வ, அபரக் கிரியைகளையும் செய்து, மக்களது சமயத் தேவைகளையும் நிறைவேற்றி வைத்த பெரியார் இவர். இவரால் எழுதப்பட்ட [3]'சைவக்கிரியைகள்' என்னும் நூல் மிகுந்த பாராட்டைப் பெற்றதொன்றாகும்.

## தீபம் தொடர்ந்து ஒளிவீச உதவியவர்கள்

காரைநகரில் அந்நியர் ஆட்சியிற் சூழ்ந்துகொண்ட கிறிஸ்துமத இருளை நீக்குவதற்குச் சைவப்பணி என்னும் பெருந்தீபம் ஏற்றிவைக்கப்பட்ட வரலாற்றினை அறிந்துகொண்டோம். அத்தீபம் அணைந்துவிடாது தொடர்ந்தும் ஒளிவீசிக்கொண்டிருக்கத் தத்தமக்கு இயன்றவரையில் உதவினோரும் உளர். அவர்கள் இயற்றிய உதவிகள் சிலவற்றை நோக்குவோம்.

### சட்டம்பியார் கந்தர்

இவர், சைவசமய அடிப்படையிலே சைவச்சிறார் கல்வி கற்க வேண்டும் என்னும் நாவலர் பெருமானது வழிகாட்டுகைக்கு இயைய, தங்கோட்டையில் மாணவர் பலரைக்கூட்டி ஒருபாடசாலையை அமைத்துக் கல்வி பயிற்றி வந்தவர்; பின்னர், கிறிஸ்தவர்களின் எதிர்ப்புக்கு ஈடுகொடுக்க இயலாது போகவே, தமது இல்லத்தில் மாணவர்களை அழைத்து வைத்துச் சைவநெறியைப் போதித்து வந்தார்.

### பிரம்மஸ்ரீ கா. சிவசிதம்பரஐயர்

கார்த்திகேயப் புலவரின் மகனாகிய இவர், தமிழ் சம்ஸ்கிருதம் ஆகிய மொழிகளில் பெரும்புலமை வாய்ந்தவர்; மாணவர்களுக்குச் சமயக்கல்வியை இயற்றியதோடமையாமல் தக்ஷிணகைலாச புராணத்தைப் பதிப்பித்தும், கந்தபுராணம்

---

1. முதற்பதிப்பு 1959 ஆவணி - காரைநகர் மணிவாசகர்சபை வெளியீடு
   இரண்டாம் பதிப்பு 1959 மார்கழி ,,
2. 1960 - காரைநகர்க் கலைமகள் மன்ற வெளியீடு
3. களபூமி, திரு. மு. பொன்னம்பலம் அவர்கள் பதிப்பு - 1964

மகேந்திரகாண்டத்திற்கு [1]உரைஎழுதியும் நற்பணி புரிந்துள்ளார். மகேந்திரகாண்ட உரை அறிஞர்களாற் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது. [2]திக்கைநாயகர் மும்மணிமாலை என்னும் பிரபந்தமும் இவரால் இயற்றப்பட்டது.

திரு. மு. திசைநாயகம்

சட்டத்தரணித் தொழிலை மேற்கொண்டிருந்த இவர், சைவநூல்களில் நல்ல பயிற்சி பெற்றிருந்ததோடமையாது தேவாரப் பதிகங்களைப் பண்ணோடு பாடவும் வல்லவராய் விளங்கினர். அன்றியும், வானநூற் புலமையும் வாய்ந்திருந்த இவர், காரைநகர்ச் சைவமகாசபையின் தலைவராயிருந்து பெரும்பணி புரிந்துள்ளார்.

திரு. த. நாகமுத்துப்புலர்

இயல்பிலேயே செய்யுள் புனையும் ஆற்றல்மிக்க இவர், தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் சைவசமய நூல்களிலும் நல்லதேர்ச்சி பெற்றிருந்தார். சைவப்பெரியார் அருணசலம் அவர்களால் நிறுவப்பட்ட சுப்பிரமணிய வித்தியாசாலையில், பல ஆண்டுகளாக ஆசிரியராயிருந்து மாணவர்களுக்குச் சமயம், தமிழ் என்பவற்றைப் பயிற்றியதுடன் பொதுமக்கள் மத்தியிலும் சமய அறிவைப் பரப்பினர். காலத்திற்குக் காலம் பலபாடல்களைப் பாடியுள்ள இவர், ஈழத்துச்சிதம்பரம் சுந்தரேஸ்வரர்மீது திருவூஞ்சற் பதிகம் முதலிய சிறுபிரபந்தங்களையும் இயற்றியுள்ளார்.

திரு. இ. நாகலிங்கம்

இவர், காரைநகரில் 1915இல் இளைஞர் கல்வித் தேர்ச்சிச் சங்கத்தை நிறுவி அதன்மூலம் தொண்டு புரிந்தவர். அச்சங்

---

1. இவ்வுரை யாழ்ப்பாணத்துச் சுன்னுகம் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்களால் பரிசோதிக்கப்பெற்று, உரையாசிரியர் புதல்வராகிய சிவஞானசுந்தரசர்மாவினல், சென்னபட்டணம் சைவவித்தியாநுபாலன யந்திரசாலையில் சாதாரணஇல கார்த்திகைமீ (1909) அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

2. களபூமியிலுள்ள திக்கரை என்னுமிடத்தில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமான்மீது பாடப்பட்டது - 1882. இந்த நூல் பற்றிய குறிப்புகளை, 1882ஆம் ஆண்டு வெளிவந்த உதயதாரகைப் பத்திரிகையொன்றில், தாம் வாசித்ததாக மக்கள்கவிமணி மு. இராமலிங்கம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

கம் இப்பொழுது சைவமகாசபை என்னும் பெயருடன் பொன்விழாக் கண்டு பொலிவுற்று விளங்குகிறது. இவர், காலத்திற்குக் காலம் சைவப் பெரியார்களை அழைத்துப் பிரசங்கங்கள் செய்வித்துச் சமயக் கல்வியைப் பரப்பினர். வியாவில் சைவப் பாடசாலையின் வளர்ச்சிக்கு மூலகாரணராய் விளங்கினர்; தாமே பாடசாலைக்குச் சென்று சைவ சமய பாடத்தில் மாணவர்களைப் பரீட்சிப்பித்துப் பரிசில் நல்கிச் சைவசமயத்தில் மாணவர் நாட்டங்கொள்ள வைத்தார்.

முருகேசு சுவாமிகள் (பேப்பர் சுவாமிகள்)

ஆங்கிலமும் சமயமும் அறிந்த இவர், கோவளத்தில் ஆச்சிரமம் அமைத்துப் பணி புரிந்தார்; ஆத்மீக தாகங் கொண்ட சீடர் பலருக்கு நல்லாசானுய்த் திகழ்ந்தார்; 'தேஜஸ்' நிறைந்த சுவாமிகள், யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த வெளிநாட்டாருக்குச் சைவசமய உண்மைகளை விளக்கும் பணியையும் மேற்கொண்டிருந்தார்.

வித்துவான் பிரம்மஸ்ரீ மு. சபாரத்தின ஐயர்

வடமொழி தென்மொழிகளில் வல்ல ஐயரவர்கள், சொற்பொழிவுகள் மூலம் மக்களிடையே சமயப்பணி புரிந்து வந்தார்; சைவத் தமிழ் நூல்களை வெளியிட்டு நற்பணி செய்வதற்காகக் காரைநகரில் மாணிக்கவாசக அச்சியந்திர சாலையை நிறுவினர்; தனியொருவராகவே நின்று 'கலிகால தீபம்' என்னும் பத்திரிகையையும் நடத்தினர். ஆலயந்தோறும் சென்று புராணபடனத்திற் பங்குகொண்டு பயன் சொல்லிவந்த இவர், ஈழத்துச்சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் சுந்தரேஸ்வரப்பெருமான்மீது 1திருவூஞ்சலும் பாடியுள்ளார்.

சங்கநூற்செல்வர், பண்டிதர் சு. அருளம்பலவனர்

நல்லாசானுய் விளங்கிய அருளம்பலவனர், மாணவர்களுக்குத் தமிழ்க் கல்வியையும் சைவசமய நூல்களையும் போதித்து வந்துள்ளார்; 'திருவாசகம்' என்னும் திவ்விய

---

1. சிவஸ்ரீ ச. கணபதீஸ்வரக் குருக்களால் 1923ஆம் ஆண்டு அச்சடப்பட்டுள்ளது.

நூலுக்குச் சிறந்த விரிவுரை எழுதியுள்ளார். இவ்வுரை, சைவசாஸ்திர நுட்பங்களை உணர்ந்துகொள்வதற்குப் பெரிதும் உதவுகின்றது. சங்கநூல்களிற் புலமை படைத்த இவர், 'பதிற்றுப்பத்து', 'திருமுருகாற்றுப்படை' என்னும் நூல்களுக்கும் நல்லுரை கண்டுள்ளார். சாகித்தியமண்டலப் பரிசும் பெற்றவர் இவர்.

## இன்று சைவப்பணி இயற்றும் நிறுவனங்கள்:

ஆங்கிலேயர் ஆட்சியுடன் நாட்டில் மறுமலர்ச்சி உதயமாயிற்று. மக்கள் மத்தியில் எமது சமயம், எமது மொழி என்னும்பற்று மேலோங்கி நின்றது. தனியொருவராய் நின்று பணிபுரியும் நிலைமாறி, பலர் ஒருங்குசேர்ந்து நிறுவனரீதியில் இயங்கிப் பணிபுரியும் தன்மை கால்கொள்ளலாயிற்று. கொழும்பு மாநகரில் விவேகானந்தசபை, யாழ்நகரில் சைவ பரிபாலனசபை, சைவவித்தியாவிருத்திச்சங்கம் முதலிய மாபெரும் நிறுவனங்கள் தோன்றிச் சைவப்பணி புரியத் தலைப்பட்டன. அவை, சமயப்பிரசாரண வேலையுடன் நின்றுவிடாது பாடசாலைகளை அமைத்து, சிறந்த சைவப்பிரசைகளை உருவாக்கும் பணியிலும் ஈடுபட்டன.

இத்தகைய எழுச்சிக்குக் காரைநகர் விதிவிலக்காக இருக்கவில்லை. 1915இல் உருவாய கர்ரை இளைஞர் கல்வித் தேர்ச்சிச்சங்கம், 1918இல் காரை இந்து வாலிபர் சங்கமாய், 1924இல் சைவமகாசபையாகிப் பணிபுரிந்துவருகிறது. மணிவாசகர்சபை 1 - 1 - 1940இல் உருவாயிற்று. இவ்விரு பெரும் நிறுவனங்களுடன் நீலிப்பந்தனை இந்து இளைஞர் சங்கம், காரைநகர் கிழக்கு இந்து வாலிபர் சங்கம் முதலியனவும் மற்றும் சிறுச்சிறு இயக்கங்களும் சைவப்பணியை மேற்கொண்டுள்ளன.

**சைவமகா சபை:**

இச்சபை, சைவசித்தாந்த வகுப்புகளையும் தேவார வகுப்புகளையும் நடாத்தி வருகிறது. காலத்திற்குக் காலம் Our young men and their calture, நரக சதுர்த்தசி ஸ்நானம், திருமுறைப் பெருமை, நித்திய கருமம், நடராஜ வடிவம் தில்லைத் திருநடனம், குருகுல வித்தியாலயம், மஹோற்சவ விளக்கம், புதுவருஷ சோபனம், திருவெம்பாவை விளக்கம் என்பன பற்றிய பிரசுரங்களை வெளியிட்டுள்ளது; இந்திய

நாட்டறிஞர்களையும் ஈழநாட்டறிஞர்களையும் அழைத்துச் சமயப் பிரசங்கங்களை விரிவான அடிப்படையிற் செய்வித்து வருகின்றது; தனக்கெனச் சிறந்த கட்டடம் ஒன்றையும் அமைத்துள்ளது; அறிவுக் கருவூலமாகிய பொன்விழா மலரொன்றை வெளியிட்ட பெருமையையும் கொண்டது.

**மணிவாசகர் சபை:**

இது, திருவெம்பாவைக் காலத்தில் ஈழத்துச் சிதம்பரத்தில் தொடர்ந்து ஐந்து தினங்கள் விரிவான அடிப்படையில் மணிவாசகர் விழாவை நடத்தி வருகின்றது. அவ்விழாவில் இந்தியப் பெரியார்களும் ஈழத்து அறிஞர்களும் கலந்து கொண்டு சமயப் பேருரைகளை நிகழ்த்துகின்றனர். கடந்த காலங்களில் விழாக்களின்போது அறிவுக் கருவூலமாக விளங்கும் மூன்று மலர்களையும் வெளியிட்டுள்ளது. திருவெம்பாவை உரையை வெளியிட்டு, மக்கள் பொருளறிந்து ஓத வகை செய்துள்ளது. காரைநகரில் உள்ள சகல பாடசாலை மாணவர்களும் கலந்து கொள்ளும் வகையில் சைவசமய பாடப் பரீட்சையை நடத்தி, மாணவர்களிடையே சமய அறிவைப் பரப்பி வருகின்றது.

ஏனைய நிறுவனங்களும் காலந்தோறும் பல்வேறு சமயப் பணிகளை இயற்றி வருதல் குறிப்பிடத்தக்கதாகும்.

**மெய்கண்டார் ஆதீனக்கிளை:**

தென்னாட்டில் சைவாதீனங்கள் பல மகத்தான சேவைகளை இயற்றிவருவதை யாவரும் அறிவர். அவ்வகையில் காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீனக் கிளையொன்று காரைநகரில் உதயமாயிற்று. ஸ்ரீமத் ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைவராயிருந்து சைவப்பிரசங்கங்கள் செய்தும் நூல்களை வெளியிட்டும் தொண்டாற்றி வருகின்றார்கள். 'மெய்கண்டான்' என்னும் சஞ்சிகையையும் ஆதீனக்கிளை வெளியிட்டுப் பணி புரிகின்றது.

**சிவாச்சிரமம்:**

உயர்நீதிமன்ற நீதியரசராக இருந்து சிவபதம் அடைந்த பெரியார் திரு. ந. நடராஜா K. C. அவர்களின் வாழ்க்கைத் துணைவியாராகிய அருளன்னை தங்கம்மா அவர்களால் ஈழத்

துச் சிதம்பரத்தின் அயலில் சிவாச்சிரமம் நிறுவப்பட்டுள்ளது. இவ்வாச்சிரமத்தில் சிவபுராணபடனம், கூட்டுவழிபாடு சைவப்பிரசங்கம், சமயக் கருத்தரங்கு முதலியன நடைபெற்று வருகின்றன. வாரந்தோறும் ஞாயிறு, வெள்ளி ஆகிய நாள்களிலும், திருவெம்பாவைக் காலத்திலும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. இந்திய இலங்கை அறிஞர்கள் இங்கு வந்து சைவப்பிரசங்கங்கள் நிகழ்த்துகிறார்கள். கூத்தப்பிரானின் அபிடேக நாள்களில் திருவாசகம் முழுவதும் ஓதப்படுகின்றது. அடியார்களின் பாராயணத்திற்காகத் தேவாரத்திரட்டு ஒன்றும் ஆச்சிரமத்தால் வெளியிடப்பட்டுள்ளது. சிவமணமும் அமைதியும் தவமும் இவ்வாச்சிரமம் ஞானசாதனையை நாடும் நல்லடியார்களுக்குச் சிறந்த புகலிடமாக விளங்குகின்றது.

## நிறைவுரை:

இசையால் திசை போய காரைமாநகரில் சைவப் பயிர் செழிப்புற்ற வரலாற்றை மேலே கண்டோம். காரைவாழ் மக்கள் சிறந்த சைவப் பண்பாட்டுடன் வாழ்கின்றனர் என்று பெருமக்கள் கூறும் வாழ்த்தொலி எங்கள் காதுகளுக்குள்ளே சென்று இனிக்கின்றது. இன்றும் பழைய பழக்க வழக்கங்களையும் மரபு நெறிகளையும் பொன்னே போற் போற்றிவரும் காரை மக்கள் புதுமையை முற்றாக வெறுப்பவர்களுமல்லர் என்பதைக் கூறாமலிருக்க முடியவில்லை. அல்லல்கள் பல வந்துற்றபோதும் சமயக் கடமைகளைத் தவறாது நிறைவேற்றும் இவர்களின் குணநலத்தை உலகு பெரிதும் பாராட்டுகின்றது. இவ்வாறெல்லாம் காரை மக்களின் நல்வாழ்வுக்கும், பெரும் புகழுக்கும் ஊற்றுக்கண்களாகத் திகழ்வன ஆண்டி முனிவர் வழிநின்று பெரியார் அம்பலவி முருகர் நிறுவிய ஈழத்துச்சிதம்பரம் முதலாய ஆலயங்கள்தாம் என்றால் அது மிகையாகாது.

சோர்வு, மறதி என்பன காரணமாக நூலில் இடம் பெறவேண்டிய சில விடயங்கள் எழுதப்படாது விடுபட்டிருக்கலாம். அவ்வாறிருப்பின் அறிஞர்கள் பொறுப்பார்களாக.

வளர்க சைவநெறி!

வாழ்க சுந்தரேஸ்வரர் திருநாமம்!

அநுபந்தம் 1

# நித்திய பூசை நடைபெற்று வரும் காரைநகர்க் கோயில்கள்

சிவன் கோயில் (ஈழத்துச் சிதம்பரம்)
சடையாளி வைரவர் கோயில்
கூனன்பருத்தி வைரவர் கோயில்
அத்திபுரம் கந்தசுவாமி கோயில்
வலந்தலை கண்ணகி அம்மன் கோயில்
மடத்துக்கரை அம்பாள் கோயில்
தெருவடிப்பிள்ளையார் கோயில்
கரப்பிட்டியந்தனை வைரவர் கோயில்
கரப்பிட்டியந்தனைக் காளி கோயில்
திக்கரை முருகமூர்த்தி கோயில்
தன்னைப் பிள்ளையார் கோயில்
களபூமி அம்பாள் கோயில் (மாதா கோயில்)
இலங்கைப் போக்குவரவுச்சபைச்சாலை வைரவர் கோயில்
பாலாவோடை அம்பாள் கோயில்
தோப்புக்காடு சுப்பிரமணியசுவாமி கோயில்
துறைமுகம், சித்திரகூடம் பிள்ளையார் கோயில்
பலிகாடு இராஜராஜேஸ்வரி அம்பாள் கோயில்
கருங்காலி முருகமூர்த்தி கோயில்
வாரிவளவு கற்பகப்பிள்ளையார் கோயில்
புளியங்குளம் அருளானந்தப் பிள்ளையார் கோயில்
அண்டவேற் பிள்ளையார் கோயில்
தங்கோடை நாகம்மாள் கோயில்
புகலி சுப்பிரமணியசுவாமி கோயில்
பண்டத்தரிப்பான்புலம் சிதம்பரேஸ்வரர் கோயில்
பத்தர்கேணிப் பிள்ளையார் கோயில்
மணற்காடு முத்துமாரி அம்பாள் கோயில்
அரசடிக்காடு கதிர்வேலாயுதசுவாமி கோயில்
பயிரிக்கூடல் சுப்பிரமணியசுவாமி கோயில்
கிழவன்காடு முருகமூர்த்தி கோயில்
மருதடி வீரகத்தி விநாயகர் கோயில்
சிதம்பரமூர்த்திகேணியடி, வைரவர் கோயில்
நீலிப்பந்தனை அம்பாள் கோயில்

அநுபந்தம்: 2

## அன்றெருநாள் ஈழத்துச் சிதம்பரத்தில்!

''செயற்கரிய செய்வார் பெரியர்'' என்பது திருவள்ளுவர் திருவாக்கு.

ஈழத்துச்சிதம்பர ஸ்தாபகராகிய அம்பலவி முருகர், பெரியார் வரிசையில் முன்னிற்பவர்.

அவரின் சம்மதத்துடன், பார்வதி என்ற பெண், கோயிலுக்குச் சொந்தமான தோட்டத்திற் புல்லுச் செதுக்கிக் கொண்டிருக்கிறுள்.

தேங்காயொன்று தென்னை மரத்திலிருந்து அவளுக்கு அண்மையில் விழுகிறது. பார்வதி எழுந்துநின்று நான்கு பக்கமும் மிகக் கவனமாகப் பார்க்கிறுள்.

எவரையும் காணவில்லை.

தேங்காயை எடுத்துப் புல்லுக் கடகத்துள் வைத்து, அதன்மேல் புல்லைப் போட்டுத் தேங்காயை மறைத்துவிடுகிறுள்.

பின்னரும் புல்லுச் செதுக்குகிறுள். செதுக்கிய புல்லையும் எடுத்துக் கடகத்துள்ளே போட்டுக்கொண்டு வீட்டிற்குப் போக எழுந்து வருகிறுள்.

கோயில்மணி ''டாண், டாண்'' என்று கேட்கிறது.

உடனே, புல்லுக் கடகத்தை ஓர் இடத்தில் வைத்துவிட்டுச் சுவாமி தரிசனஞ் செய்யக் கோயிலுக்குள்ளே செல்லுகிறுள்.

அவள் போனபின்பு, அம்பலவி முருகரின் ஆப்த நண்பனும், கோயிற் பாதுகாவலனுமாகிய 'கூழையன்' என்ற நாகபாம்பு புல்லுக்குமேலே ஏறிச் சுருண்டுகொண்டு உல்லாசமாகப் படுத்துக்கொண்டது.

பூசை முடிந்ததும், விபூதி வாங்கிப் பூசி, சந்தனப் பொட்டும் இட்டுக் கொண்டு மிகுந்த குதூகலத்தோடு புல்லுக்கடகத்தடிக்கு வருகிறுள் பார்வதி.

புல்லுக்கு மேலே பாம்பு படுத்திருப்பதைக்கண்டதும் திடுக்குறுகிறுள்.

அவள்சத்தம் செய்கிறாள்; மணலை அள்ளிப் பாம்பின் மேலே வீசுகிறாள்; தடியொன்றினாற் கடகத்திலே தட்டுகிறாள்

பாம்போ அசையவில்லை.

சிறிது தூரத்துக்கப்பால் அம்பலவி முருகர், தம்மையே மறந்த நிலையில் திருவாசகத்தைப் பாடிக்கொண்டிருக்கிறார்.

''ஐயா, புல்லுக்கடகத்திற் பாம்பு படுத்திருக்கிறது; துரத்திவிடுங்கள்.''

திருவாசகத்தில் ஈடுபட்டிருந்த அம்பலவிமுருகருக்குப் பார்வதியின் சொற்கள் காதுகளில் ஏறவில்லை.

பின்னர் அம்பலவிமுருகருக்குக் கிட்டச் செல்லுகிறாள் பார்வதி.

''ஐயா, பாம்பு புல்லுக்கடகத்திற் கிடக்கிறது........''

பழைய நிலைதான்.

இரண்டு நாளிகைகள்வரை கழிந்துவிட்டன.

அம்பலவிமுருகரின் திருவாசகப்படிப்பு முடிந்துவிட்டது.

''ஐயா, நான் நீண்ட நேரமாக இங்கே நிற்கிறேன்.''

''என்ன சமாச்சாரம்?''

''கடகத்திலுள்ள புல்லுக்குமேலே பாம்பு படுத்திருக்கிறது. துரத்திவிடுங்கள்.''

''நீ ஏதோ பிழை செய்துவிட்டாய்!''

''நான் ஒரேஒரு தேங்காய்தான் எடுத்துப் புல்லால் மறைத்து வைத்திருக்கிறேன்.''

''தேங்காயை மெல்ல எடுத்து வெளியே போடு.''

''கடகத்துக்குள்ளே தேங்காய்; தேங்காய்க்கு மேலே புல்லு; புல்லுக்கு மேலே பாம்பு. எப்படி ஐயா தேங்காயை எடுப்பது?''

''கூழையா, இறங்கிக் கீழேவா.''

கூழையன் புல்லுக் கடகத்தைவிட்டுக் கீழே இறங்கி ஊர்ந்து அப்பாற் செல்லுகிறது.

பார்வதி தேங்காயை எடுத்துச் சுவாமி வாயிலில் வைத்துவிட்டுப் புல்லுக்கடகத்துடன் வீட்டுக்குப் போகிறாள்.

க. வைத்தீசுவரக்குருக்கள்

நன்றி: காரைஒளி - 1970

அநுபந்தம்: 3

# மாசிலாமணியும் - பிடி அரிசியும்

அன்று நான் அரையில் சீலை இல்லாத குழந்தை. கிழவர் ஒருவர், நூறு நூற்றைம்பது பனை ஓலைக்குட்டான்களுடன் எங்கள் வீட்டுப் படலையைத் திறக்கிறார். வீட்டு முற்றத்தில் நின்ற எங்கள் ''பொலிசு''நாய் குரைத்துக்கொண்டு அவரை விரட்டுகிறது. குசினியிலிருந்த எனது தாயார் ஓடிவந்து நாயை விரட்டிவிட்டுக் குட்டான்களுடன் வந்த கிழவருக்கு ஒருவருக்குமில்லா உபசாரம். தாயாரின் கையில் கிழவர் ஒரு குட்டானைக் கொடுக்கிறார். எனக்கு விஷயம் ஒன்றும் புரியவில்லை. நானும் ஒரு குட்டானை எனக்குக் கொடுக்கும்படி சண்டை போடுகிறேன். தாயாரிடமிருந்து அடிதான் கிடைத்தது. கிழவர் யாருமல்லர். சிவன் கோயில் மணியகாரர் மாசிலாமணி. தாயாரிடம் கொடுத்தது பிடிஅரிசிக் குட்டான். அது அடுப்பங்கரையில் தூக்கப்பட்டது. நாளுக்கு நாள் பானையில் அரிசியைப் போடமுன் குட்டானில் ஒருபிடி அரிசி ஆண்டவனுக்கு. அது அப்போது.

இப்போது என்ன நடக்கிறது? வீடுகளில் சமையல் நடந்தால்தானே பிடி அரிசி போடலாம்! புருஷன் ஒரு பக்கம் உழவுக்குப்போக, பெண்சாதி மற்றப்பக்கம் தொழிலுக்குப் போவாள். அடுப்பங்கரையில் அரிசி ஆக்க ஆருமில்லை. பிடி அரிசிக் குட்டானும் அப்படியே இருக்கிறது.

என்றாலும் நான் எங்கள் சிவன் கோயிலை எப்படி மறப்பது? எனது கந்தோரில் ஒரு சின்ன உண்டியல். மண்ணால் செய்த முட்டி. எனது ''பார்சிற்குள்'' வந்து சேரும் ஒரு சத நாணயங்களெல்லாம் அந்த முட்டிக்குள் தஞ்சம் புகும் சிவனை நினைந்து. எனது இருதயம் சற்று மலரும் அப்போது! ஆண்டவனை நினைந்து!!

சி. வே. சிவகுரு

வணக்கம்!!!

நன்றி: காரைஒளி - 1970

அச்சுப்பதிவு:
பாலா அச்சகம், காரைநகர்.
போன்: 84